சார்பு நீதிமன்றம், குளித்தலை
MCOP.NO. **123 / 2015**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1** வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை – II திருமதி.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **02.01.2025** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: சுரேஷ் | கிராமம் : |
| த/பெ: | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை – ம.சா.ஆ.1. மருத்துவ பில்கள் – ம.சா.ஆ.2. ஓட்டுநர் உரிமம் நகல் – ம.சா.ஆ.3 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றேன். மேற்படி வாகனம் என்னுடையது தான். மேற்படி வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தினை தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் மேற்படி மனுவானது குறைபாடு உடையது என்றால் சரியல்ல. நான் சாலையின் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றுக்கொண்டிருந்தேன். மேற்படி என்மீது மோதிய வாகனம் என் பின்னால் வந்து மோதியது. சாலையில் எனக்கு முன்பாக ஏதேனும் வாகனம் எதுவும் சென்றதா என்றால் இல்லை. நான் சென்றுக்கொண்டிருந்த சாலையானது வளைந்து செல்லக்கூடிய சாலை. அவ்வாறு வளைந்து செல்லக்கூடிய சமயத்தில் தான் பின்னால் வந்த வாகனம் என்மீது மோதியது. பின்னால் வந்த வாகனத்தின் எந்த பகுதி நான் பயணித்த வாகனத்தின் எந்த பகுதியில் மோதியது என்றால் ஜீப்பின் வலது முன்புற பகுதி என்னுடைய வாகனத்தின் இடதுபுற பெட்ரோல் டேங்கின் மீது மோதியது. மேற்படி சாலையானது நேராகவும் வளைந்தும் செல்லக்கூடிய சாலையாகும். நான் அந்த சாலையில் நேராக செல்லக்கூடிய நபர். என்மீது மோதியதாக கூறக்கூடிய வாகனமானது ஊருக்குள் செல்லவேண்டியவை என்றால் சரிதான். சாலையின் கிழக்கு பகுதியில் வளைந்து செல்லும் சாலை வழியாக தான் ஊருக்குள் செல்லவேண்டும் அவ்வாறு தான் அந்த ஜீப் சென்றது. மேற்படி வாகனமானது எனக்கு பின்னால் வந்து என்னை முந்தி சென்று வலது பக்கம் திரும்பியதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விபத்து நடைபெற்றிருந்தால் ஜீப்பின் வலது பகுதியில் தான் சேதம் ஏற்பட்டிருக்கும்

என்றால் சரியல்ல. ஜீப் ஓட்டுநர் வாகனத்தை கவனமாக தான் ஓட்டினார் என்றாலும், நான் தான் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்தி விட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து காயத்திற்கும் நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட காயத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல மேற்படி சாலையானது வளைந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்து நடந்த சாலையானது நான்கு வழி சாலை என்றால் சரிதான். நான் என்மீது உள்ள தவறை மறைத்து பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தில் எனது தவறை மறைப்பதற்காக தான் குற்ற வழக்கில் கண்டுள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.